

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.8.2024) தலைமைச் செயலகத்தில், நிதித்துறையின் கட்டுப்பாட்டில் செயல்படும் தணிக்கைத் துறைகளில் கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநர், இளநிலை கூட்டுறவு தணிக்கையாளர், உதவி ஆய்வாளர் மற்றும் உதவி தணிக்கை ஆய்வாளர் பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்ட 780 நபர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கிடும் அடையாளமாக 20 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், நிதித்துறை செயலர் (செலவினம்) எஸ். நாகராஜன், தலைமை தணிக்கை இயக்குநர் ஜி.கே.அருண் சுந்தர் தயாளன், கூட்டுறவு தணிக்கைத்துறை இயக்குநர் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.8.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டின் கலாச்சார உறவுகளை மேம்படுத்தும் "வேர்களைத் தேடி திட்டத்தின் கீழ், தென் ஆப்ரிக்கா, உகாண்டா, குவாடலூப், மார்டினிக், பிஜி, இந்தோனேஷியா, மொரிஷியஸ், ஆஸ்திரேலியா, மாலத்தீவு, கனடா, மியான்மர், மலேசியா, இலங்கை. பிரான்சு மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளைச் சேர்ந்த 100 அயலகத் தமிழ் இளைஞர்கள் 1.08.2024 அன்று முதல் 15.08.2024 வரையிலான தமிழக சுற்றுப் பயணத்திற்கு துணிமணிகள், பயண குறிப்புகள், புத்தகங்கள், அடையாள அட்டை போன்ற பயணத்திற்கான பொருட்களை வழங்கி தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ் மஸ்தான், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பொது மற்றும் மறுவாழ்வுத்துறை செயலாளர் திருமதி. ரீட்டா ஹரிஷ் தக்கர், பொது மற்றும் மறுவாழ்வுத்துறை இணைச் செயலாளர் பா.விஷ்ணு சந்திரன், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையர் பா. கிருஷ்ணமூர்த்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### நிதித்துறை கட்டுப்பாட்டில் உள்ள தணிக்கைத் துறைகளுக்குத் தேர்வான

# 780 தணிக்கையாளர்களுக்கு பணி நியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஆக.2-

நிதித்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள தணிக்கைத் துறைகளுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 780 தணிக்கையாளர் பணியிடங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.8.2024) தலைமைச் செயலகத்தில், நிதித்துறையின் கட்டுப்பாட்டில் செயல்படும் தணிக்கைத்துறைகளில் கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநர், இளநிலை கூட்டுறவு தணிக்கையாளர், உதவி ஆய்வாளர் மற்றும் உதவி தணிக்கை ஆய்வாளர் பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்ட 780 நபர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கிடும் அடையாளமாக 20 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

நிதித்துறையின் கட்டுப்பாட்டில் செயல்படும் கூட்டுறவு தணிக்கைத் துறையில் 7 கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநர் பணியிடங்களும், 928 இளநிலை கூட்டுறவு தணிக்கையாளர் பணியிடங்களில் முதற்கட்டமாக 700 இளநிலை கூட்டுறவு தணிக்கையாளர் பணியிடங்களும், உள்ளாட்சி நிதி தணிக்கை துறையில் 43 உதவி ஆய்வாளர்கள் பணியிடங்களும் மற்றும் இந்து சமய அறநிலைய நிறுவனங்களின் தணிக்கைத் துறையில் 30 உதவி தணிக்கை ஆய்வாளர் பணியிடங்களும் என மொத்தம் 780 பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டன.

இளநிலை கூட்டுறவுத் தணிக்கையாளரின் முக்கிய பணி, தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி உள்ளிட்ட அனைத்து கூட்டுறவு சங்கங்களின் செயல்பாடுகளை தணிக்கை செய்தல், வரவினமாக உள்ள கடன், அசல், வட்டி போன்ற இனங்கள் உரிய முறையில் வரவு வைக்கப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்வதாகவும்.

இந்து சமய அறநிலைய நிறுவனங்களின் தணிக்கை ஆய்வாளர் பணியானது, இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அறநிலைய நிறுவனங்களின் பொது கணக்கு, அன்னதான கணக்கு, திருப்பணி மற்றும் இதர வரவுசெலவு கணக்குகள் மீது தணிக்கை மேற்கொண்டு இந்து சமய அறநிலைய சட்ட விதிகளுக்குட்பட்டு வரவுசெலவுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை உறுதி செய்வதாகும்.

உள்ளாட்சி நிதி தணிக்கை துறையின் உதவி ஆய்வாளர் பணியானது, உள்ளாட்சி நிறுவனங்களின் கணக்குகளைச் சரிபார்த்தல், வரவு செலவுகள் முறையாக உள்ளனவா என்பதையும், வரவு செலவுகள் சம்பந்தப்பட்ட சட்டத்திற்குட்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றனவா என்பதையும் உறுதி செய்தல், அரசு மற்றும் பிற நிதி உதவி அளிக்கும் நிறுவனங்கள் வழங்கும் நிதி வழங்கப்பட்ட காரணங்களுக்காக முறையாக பயன்படுத்தப்படுகிறதா என்பதை ஆய்வு செய்வதாகும்.

புதிதாக நியமனம் பெற்றுள்ள தணிக்கையாளர்களுக்கு சென்னை, மதுரை, கோவை, தஞ்சாவூர் மற்றும் தூத்துக்குடியில் தேர்ந்தெடுக்கப்பட்ட மையங்களில் தணிக்கைப்பணி தொடர்பான முழுமையான பயிற்சி வழங்கப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், நிதித்துறை செயலர் (செலவினம்)

எஸ். நாகராஜன், தலைமை தணிக்கை இயக்குநர் ஜி.கே.அருண் சுந்தர் தயாளன், கூட்டுறவு தணிக்கைத்துறை இயக்குநர் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சுதந்திரப் போராட்ட வீரர்

# தீரன் சின்னமலை சிலைக்கு முதல்வர் மரியாதை!

சென்னை, ஆக. 2 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில் 3.8.2024 அன்று காலை 9.00 மணியளவில் சென்னை, கிண்டி, திரு.வி.க. தொழிற்பேட்டை வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலையின் கீழ் அலங்கரித்து வைக்கப்படும் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

தீரன் சின்னமலை அவர்கள் ஈரோடு மாவட்டம் காங்கேயம் அருகில் மேலப்பாளையம் என்ற சிற்றூரில் பிறந்தார். இவரது இயற்பெயர் தீர்த்தகிரி. தீரன் சின்னமலை அவர்கள் இளம் வயதிலேயே போர்க்கலைகளான வாள்பயிற்சி, வில் பயிற்சி, சிலம்பாட்டம், மல்யுத்தம், தடிவரிசை போன்றவற்றைக் கற்றுத் தேர்ந்து சிறந்த இளம் வீரராகத் திகழ்ந்தார்.

பல்வேறு துணிச்சலான போர்க்கலைகளைக் கற்றுத் தேர்ந்து, போர் யுக்திகளைத் தனது படைகளுக்குக் கற்றுத்தந்தார். இந்திய விடுதலைப் போரில் பங்கேற்று ஆங்கிலேயர்களுக்குச் சவால் விட்டு அவர்களின் கிழக்கிந்தியக் கம்பெனியை அடியோடு ஒழிக்க நடவடிக்கை மேற்கொண்டார்.

ஆங்கிலேயர்களிடம் அடிமைப்பட்டுக் கிடந்த இந்தியாவை மீட்டெடுக்க மைசூர் மன்னன் திப்பு சுல்தான் உடன் இணைந்து செயல்பட்டார். கொங்கு மண்ணில், அன்றைய மைசூர் அரசு வசூலித்த வரியைத் தடுத்து "சென்னிமலைக்கும் சிவன்மலைக்கும் இடையே ஒரு சின்னமலை" என்று பெயர் பெற்றார்.

மைசூரில் ஆங்கிலேயர்களுக்கு எதிராக நடைபெற்ற மூன்று போர்களிலும் திப்பு சுல்தான் - தீரன் சின்னமலை கூட்டணி வெற்றியடைந்ததைக் கண்டு வெகுண்டெழுந்த ஆங்கிலேயர்கள் பல புதிய போர் யுக்திகளைக் கையாளத் திட்டம் தீட்டினர்.

திப்பு சுல்தான் மாவீரன் நெப்போலியனிடம் நான்காம் மைசூர்ப் போரில் தங்களுக்கு உதவி புரியக் கோரி தூது அனுப்பினார். என்னதான் நெப்போலியன் உதவி புரிந்தாலும், தங்களது படைகளோடு துணிச்சலுடனும் வீரத்துடனும் திப்பு சுல்தானும் சின்னமலையும் அயராது போரிட்டனர். மைசூர் மன்னர் திப்பு சுல்தான் நான்காம் மைசூர்ப்போரில் போர்க்களத்திலேயே வீரமரண மடைந்தார்.

அதன் தொடர்ச்சியாக நடைபெற்ற பல போர்களில் தோல்வியடைந்த ஆங்கிலேயர்கள் கோபமடைந்து தீரன் சின்னமலையைச் சூழ்ச்சி செய்து அவரையும், அவரது சகோதரர்களையும் ஆங்கிலேயர்கள் கைது செய்து சங்ககிரிக் கோட்டையில் தூக்கி லிட்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களுக்குப் பெருமை சேர்க்கின்ற வகையில் சென்னை, கிண்டியில் முழு உருவச் சிலையினை அமைத்து 4.10.1998 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பொற்கரங்களால் திறந்து வைக்கப் பட்டது.

தமிழ்நாடு அரசின் சார்பில், சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு, நடைபெறும் இந்நிகழ்ச்சியில் அமைச்சர் பெருமக்கள், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள், சீர்மிகு பெருமக்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

### காவிரி டெல்டா மாவட்டங்களில் வேளாண் தொழில்துறை வழித்தடத்திற்கு

# ஒன்றிய அரசு முன்மொழிந்த நிதியுதவி என்ன?

## நாடாளுமன்றக் கழக குழுத் துணைத்தலைவர் தயாநிதி மாறன் எம்.பி, கேள்வி!

புதுடெல்லி, ஆக 2-

தமிழ்நாட்டில் வேளாண் தொழில்துறை வழித்தடத்திற்கு ஒன்றிய அரசு முன்மொழிந்த நிதியுதவி என்ன எனவும் அத்திட்டங்களின் தற்போதைய நிலை உள்ளிட்ட பல்வேறு கேள்விகளை நாடாளுமன்றத்தில் ஒன்றிய உணவு பதப்படுத்தும் தொழில் அமைச்சகத்திடம் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத்தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் கேள்வி எழுப்பினார்.



அதன் விவரங்கள் வருமாறு :

காவிரி டெல்டா மாவட்டங்களில் வேளாண் தொழில்துறை வழித்தடத்திற்கு ஒன்றிய அரசு முன்மொழிந்த நிதியுதவி என்ன எனவும் தேனி, மணப்பாறை மற்றும் திண்டிவனத்தில் உணவுப் பூங்காக்களை மேம்படுத்த கூடுதல் நிதி அல்லது மானியங்கள் ஏதேனும் உள்ளதா, அதன் விவரங்கள் என்ன?

வேளாண் தொழில் துறை திட்டங்களுக்குத் தேவையான உள்கட்டமைப்பை மேம்படுத்துவதில் ஒன்றிய அரசு உதவும் விதம் மற்றும் இந்தத் திட்டங்களுக்கான சரியான நேரத்தில் ஆதரவை உறுதி செய்வதில் ஒன்றிய அரசு கட்டுப்பாட்டிலுள்ள நிறுவனங்களின் பங்கு என்ன?

உணவு பதப்படுத்தும் அலகுகளில் மேம்பட்ட தொழில்நுட்பங்களை இணைக்கத் திட்டமிடப்பட்டுள்ள முன்முயற்சிகள் என்ன எனவும் உணவு பதப்படுத்தும் தொழில்நுட்பங்கள் மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கு ஆதரவளிக்கும் வகையில் ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

தேசிய மற்றும் சர்வதேசச் சந்தைகளை அணுகுறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மற்றும் சிறிய அளவிலான உற்பத்தியாளர்களுக்கு உதவ ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

உணவு பதப்படுத்துதல் மற்றும் அது சார்ந்த துறைகளில் சிறப்புப் பயிற்சி படிப்புகளை வழங்குவதற்கு கல்வி நிறுவனங்களுடன் இணைந்து அமைச்சகத்தால் ஏதேனும் திட்டங்கள் அல்லது கொள்கைகள் செயல்படுத்தப்படுகிறதா மற்றும் அது தொடர்பான விவரங்கள் என்ன எனவும் கேள்விகள் எழுப்பினார்.





முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2009ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட அருந்ததியர் சமூகத்திற்கு 3 சதவீத உள் ஒதுக்கீடு அளிக்கும் சட்டத்திற்கு உச்சநீதிமன்றம் அங்கீகாரம் அளித்ததை தொடர்ந்து கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான இ.பரந்தாமன், எழும்பூர் தொகுதிக்குட்பட்ட கீழ்ப்பாக்கம் புல்லாபுரத்திலும், சூளை குறவன் குளத்திலும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி, பொதுமக்கள் மத்தியில் உரையாற்றி இனிப்புகளை வழங்கினார். இந்நிகழ்வில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாவட்டச் செயலாளர் இளங்கோ, தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரிய மாநில உறுப்பினர் வழக்கறிஞர் ஜி.கே.ராஜன், புருஷோத்தமன், புரசை எஸ்.குமார், கலையரசன், வெ.மருதன், மா.காந்தி, கமலக்கண்ணன், இரா.வெற்றிவேல், ஜெ.சிலம்பரசன், குருமூர்த்தி, பு.சதிஷ்குமார், கவிதா, குணசேகரன், சூளை பன்னீர், வழக்கறிஞர் நேரு பிரபா, கோமகன், புஷ்பராஜ், பிரம்மதேவன், பாலாஜி அன்புமணி, கே.ஐசக், என்.ஆர். பிரசாத், எம்.யாகப், கே.கபில், கே.ஷியாம் டேனியல், கே.டேவிட் ராஜ், என்.பி.பிரசன்னகுமார், என்.ஆர்.இஸ்ராயில் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும் செயல்வீரர்களும் கலந்து கொண்டனர்.

### இலங்கை கடற்படையின் படகு மோதி விபத்து!

# உயிரிழந்த மீனவர் குடும்பத்திற்கு ரூ.10 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, ஆக. 2 -


இலங்கைக் கடற்படையினரின் ரோந்துப்படகு மோதியதில் உயிரிழந்த இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த மீனவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மூக்கையா (வயது 54), முத்துமுனியாண்டி (வயது 57), மலைச்சாமி (வயது 59) மற்றும் இராமச்சந்திரன் (வயது 64) ஆகிய நால்வரும் நேற்று (01.08.2024) அதிகாலை இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து விசைப்படகில் சென்று நெடுந்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த போது அங்குவந்த இலங்கைக் கடற்படையினரின் ரோந்துப்படகு மோதியதில், மீன்பிடி விசைப்படகு சேதமடைந்து நீரில் மூழ்கியதில் மலைச்சாமி (வயது 59) என்பவர் கடலில் மூழ்கி உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், அந்த விசைப் படகில் சென்ற இரண்டு மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் அழைத்துச் சென்றதாகத் தெரியவருகிறது. மேலும், மற்றொரு மீனவர் தேடப்பட்டு வருகிறார். தமிழ்நாடு அரசு தொடர்ந்து பலமுறை கடிதம் மூலமாகவும், நேரிலும் ஒன்றிய அரசை வலியுறுத்தியும் உரிய தூதரக நடவடிக்கை கள் மேற்கொள்ளப் படாததால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படு வதும் இதுபோன்ற விலைமதிப்பில்லா உயிரிழப்புகளும் நேர்கின்றது.

இச்சம்ப வத்தை ஒன்றிய அரசிடம் தமிழ்நாடு அரசு தக்க முறையில் எடுத்துச் செல்லும்.

இச்சம்பவத்தில் உயிரிழந்த மலைச்சாமி அவர்களின் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலைத் தெரி வித்துக் கொள்வதோடு, அவருடைய குடும்பத்தினருக்கு பத்து இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருவாலங்காடு ஒன்றியம் நல்லாட்டூர் ஊராட்சி பகுதியில் மக்களுடன் முதல்வர் முகாம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, கலந்து கொண்டு முகாமை துவக்கி வைத்து பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்தார். அப்போது 8 ஆம் வகுப்பு படிக்கும் அரசு பள்ளி மாணவி படிக்க தொலைபேசி வேண்டுமென்று கோரிக்கை வைத்தனர் இதனைஏற்று ஒரு மணி நேரத்துக்குள் அம்மாணவிக்கு தொலைபேசி வழங்கினார். உடன் ஒன்றியச் செயலாளர் கூளூர் எம்.ராஜேந்திரன், ஊராட்சி மன்ற தலைவர் கலையரசிகமலநாதன், உள்பட பலர் உள்ளனர்.

# தேவகோட்டை அ.ம.மு.க. இளைஞரணி நிர்வாகி உட்பட 25 பேர் கழகத்தில் சேர்ந்தனர்!

## அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் முன்னிலை!

## பெரி.பாலா ஏற்பாடு!

சிவகங்கை, ஆக.2 -

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை நகர அ.ம.மு.க. இளைஞரணி அமைப்பாளர் கபில் ராஜா தலைமையில் காஜா முஹம்மது உட்பட 25 பேர் அக்கட்சியில் இருந்து விலகி சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே.ஆர். பெரியகருப்பன், முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் ஆகியோர் முன்னிலையில் கழகத்தில் இணைந்தார்கள்.

அனைவருக்கும் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் கைத்தறி துண்டு அணிவித்து வரவேற்றார்.

இந்த நிகழ்ச்சியில் நகரக் கழகச் செயலாளர்கள் பெரி. பாலா, என்.குணசேகரன், சாக்கோட்டை மேற்கு ஒன்றியச் செயலாளர் கே.ஆர். ஆனந்த், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக் குமார், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ் குமார், நிர்வாகிகள் சன் சீமான் சுப்பையா, காளி முத்து,ருக்மா சரவணன் சிதம்பரம் ஜெபத்துரை, இளைஞரணி மோகன்ராஜ், சேவியர் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.